# <u>எதிர்ச்சொற்கள்</u>




பாபு கதவை **மூடிவிட்டான்.**

கோபு கதவைத் **திறந்துவிட்டான்.**




ஐஸ்கிரீம் **குளிர்ச்சியாக** இருக்கும்.

நெருப்பு **வெப்பமாக** இருக்கும்.




கோபி படியில் **இறங்கி கீழே** போகிறான்.

அருண் படியில் **ஏறி மேலே** போகிறான்.




சிவா **வேகமாக** ஓடுகிறான்.

பாரி **மெதுவாக** ஓடுகிறான்.




வண்டு ஜாடிக்கு **உள்ளே** உள்ளது.

வண்டு ஜாடிக்கு **வெளியே** உள்ளது.




ராணி **இடது** புறமாக நடக்கிறாள்.

ராஜா **வலது** புறமாக நடக்கிறான்.




மணி **வெளிச்சத்தில்** நிற்கிறான்.

ரமணி **இருட்டில்** நிற்கிறான்.




ரதி **சோகத்தில்** அழுகிறாள்.

மதி **மகிழ்ச்சியில்** சிரிக்கிறான்




கமலாவின் முடி **நீளமாக** உள்ளது.

விமலாவின் முடி **குட்டையாக** உள்ளது




அமலா ஓவியம் வரைய **ஆரம்பித்துவிட்டாள்**.

அமலா ஓவியம் வரைந்து **முடித்துவிட்டாள்**.




செல்வி **முன்புறமாக** நிற்கிறாள்.

செல்வி **பின்புறமாக** நிற்கிறாள்.




மணி **குண்டாக** உள்ளான்.

ரமணி **ஒல்லியாக** உள்ளான்.